1278

உ

தோத்திரக் கவித்திரட்டு.

தமிழறிஞர்,

N. கிருஷ்ணசாமி ஐயரால்

தொகுக்கப்பெற்றது.

O2:417
M26
176577

1926. [விலை அணா 1.

தோத்திரக் கவித்திரட்டு.

தமிழறிஞர்,

N. கிருஷ்ணசாமி ஐயரால்

தொகுக்கப்பெற்றது.

காபிரைட்) 1926. (விலை அணா 1

Printed at the
MANONMONY VILAS PRESS, MADURA.

தோத்திரக் கவித்திரட்டு.

விநாயகர் துதி.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை. 1

வேட்கை வினைமுடித்து மெய்யடியார்க் கின்பஞ்செய்
தாட்கொண் டருளு மரன்சேயை—வாட்கதிர்கொள்
காந்தார மார்பிற் கமழ்தார்க் கணபதியை
வேந்தா வுடைத்தமரர் விண். 2

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே. 3

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
வெண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம். 4

முருகக் கடவுள்.

குன்றம் எறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய்! அழகியாய்! ஏறூர்ந்தான் ஏறே!
உளையாயென் னுள்ளத் துறை. 5

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
தொளைத்தவே லுண்டே துணை. 6

உன்னை யொழிய வொருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில்வாழ் வே. 7

அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன். 8

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 9

மூவிரு முகங்கள்போற்றி முகம்பொழி கருணைபோற்றி
எவருந் துதிக்கநின்ற இராறுதோள் போற்றிகாஞ்சி
மாவடிவைகுஞ் செவ்வேள் மலரடி போற்றியன்னான்
சேவலும் மயிலும்போற்றி திருக்கைவேல்போற்றிபோற்றி.

மாயையின் வலியோனாகி மால்முதலோரை வென்றே
யாயிரத் தோரெட் டண்ட மரசுசெய் தகனூற் றெட்டுக்
காயம தழிவின் றாகிக் கடவுளர்க் கலக்கண் செய்த
தியசூர் முதலைச் செற்ற குமரன்றாள் சென்னி வைப்பாய்.11

முருகோட்டந் தரப்பாயு மும்மதமு மூற்றெடு
முருவிற் கோட்டு, ஒருகோட்டு மழகளிற்றை இருகோட்
முதுகளிறு உலவக்காட்டி, பருகோட்ட நரைவேட்டு
பைங்கோட்டுத் தினைப் புனத்துப் பரண்மேற்கொண்டு, குரு
கோட்டும் பெடைமணந்த குமரகோட் டத்தடிகள் குலத்
தாள் போற்றி. 12

எறுமயில் எறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

மீனாக்ஷி

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மானிட மரபின் மேவியே
யறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
விறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம். 14

திருவே! விளைந்த செந்தேனே! வடியிட்ட தெள்ளமுதின்
உருவே! மடப்பிள்ளை யோதிமமே! யொற்றையாடகப் பூந்
தருவே! நின் தாமரைத்தாளே சரணம் சரணங்கண்டாய்
அருவே! யணங்கரசே! மதுராபுரி யம்பிகையே. 15

இணங்கே னொருவரை நின்னிருதா ளின்றி யெப்பொழுதும்
வணங்கே னொருவரை வாழ்த்துகிலே னெஞ்சில்வஞ்சகர்பாற்
பிணங்கே னமிர்தம் பெருகுஞ் சிறிய பிறைமுடித்த
அணங்கே சரணங் கண்டாய் மதுராபுரி யம்பிகையே. 16

சபாநாயகர்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 17

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி .18

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
யற்புதக் கோல நீடியருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று
பொற்புட னடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி. 19

சிவபெருமான்

கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
உலாவு சடைமே லுறையும்—நிலாவை
வழிய வார்த் தாலன்ன மாநீற்றார் நாகம்
கழியஆர்த்தார் நமக்கோர் காப்பு. 20

மானு மழுவுந் திருமிடற்றில் வாழுமிருள்
தானும் பிறையுந் தரித்திருக்கும்—வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தென்
உள்ளத்தே நின்ற வொளி. 21

கிழவருமாய் நோய்மூப்புக் கீழ்ப்பட்டுக் காமத்
துழவரும்போ யோயுமா கண்டோ—மொழிதெரிய
வாயினா லிப்போதே மன்றினட மாடு
நாயனா ரென்றுரைப்போ நாம். 22

ஊனாகி யூனு ளுயிராயுயிர் தோறு மாகி
வானாதி யான பொருளாய் மதியாகி வெய்யோன்
தானாகி யாண்பெ ணுருவாகிச் சராசரங்கள்
ஆனான் சிவன்மற் றவனீள்கழற் கன்புசெய்வாம். 23

பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையு
மறப்பது நினைப்பதும் வடிவும் யாவையும்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம். 24

இரும்புதரு மனத்தேனை யீர்த்தீர்த்தென் என்புருக்கிக்,
கரும்புதரு சுவையெனக்குக் காட்டினையுன் கழலிணைகள்,
ஒருங்கு திரையுலவு சடை யுடையானே நரிகள் எல்லாம்,
பெருங்குதிரை யாக்கியவா றன்றே யுன்பேரருளே. 25

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில் வளர்ந்துள்ளுருகத்,
தெருவுதொறு மிக அலறிச் சிவபெருமான் என்றேத்திப்,
பருகிய நின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமாறு, அரு
ளெனக்கிங் கிடைமருதே யிடங்கொண்ட அம்மானே. 26

கூறும்நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லா நீ
தேறும் வகைநீ திகைப்புநீ தீமை நன்மை முழுதும் நீ, வே
றோர் பரிசிங் கொன்றில்லை மெய்ம்மையுன்னை விரித்துரைக்
கில், தேறும் வகையென் சிவலோகா திகைத்தால் தேற்ற
வேண்டாவோ. 27

கதிக்குவழி காட்டுகின்ற கண்ணே! யென் கண்ணில்
கலந்தமணி யே! மணியில் கலந்தகதி ரொளியே!
விதிக்குமுல குயிர்க்குயிராய் விளங்குகின்ற சிவமே
மெய்யுணர்ந்தோர் கையகத்தே விளங்கியதிங் கனியே

மதிக்குமதிக் கப்புறம்போய் வயங்குதனி நிலையே!
மறைமுடியா கமமுடிமேல் வயங்குமின்ப நிறைவே!
துதிக்குமன்பர் தொழப்பொதுவில் நடம்புரியு மரசே!
சொல்மாலை சூட்டுகின்றேன் தோளிலணிந் தருளே 28

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் ளமுதே!
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே!
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கலணிந் தருளே. 29

கையாத தீங்கனியே! கயக்காதே வமுதே!
கரையாத கற்கண்டே! புரையாத கரும்பே!
பொய்யாத பெருவாழ்வே! புகையாத கனலே!
போகாத புனலே! உள் வேகாத காலே!
கோய்யாத நறுமலரே! கோவாத மணியே!
குளியாத பெருமுத்தே! ஒளியாத வெளியே!
செய்யாத பேருதவி செய்தபெருந் தகையே
தெய்வநடத் தரசே! என் சிறுமொழியேற் றருளே. 30

இராமலிங்கசுவாமிகள்

176517

கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்ச முருகவிலையே
கருணைக் கிணங்காத வன்மையையு நான்முகன்
கற்பிக்க வொரு கடவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழுக்கு முண்டோ
வானமாய் நின்றின்ப மழையா யிரங்கியெனை
வாழ்விப்ப துன்பரங் காண்
பொல்லாத சேயெனிற் றாய்தள்ளல் நீதமோ
புகலிடம் பிறிது முண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப்
புன்மையே னாவனந்தோ
சொல்லான் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மாவிருக்க அருளாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. 31
கல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள்
கற்றுமறி வில்லாதவென்
கர்மத்தையென்சொல்கேன்மதியையென்சொல்லுகேன்
கைவல்ய ஞானநீதி
நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று
நாட்டுவேன் கர்மமொருவன்
நாட்டினா லோபழய ஞானமுக் கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே

வல்லா னொருத்தன்வர வுந்தரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்
வெல்லாம லெவரையு மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. 32

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்திரஜா லக்கோலம்
வஞ்சனை பொறாமைலோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனை யிலாதகனவே
யெந்நாளு ஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லாவிடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்னும் அரவுமூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே. 33

சரஸ்வதி துதி.

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய். 34

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர். 35

படிக நிறமும் பவளம்போற் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி. 36

பெருந்திருவுஞ் சயமங்கையு மாகியென் பேதைநெஞ்சில்
இருந்தருளுஞ் சொல்வஞ்சியைப்போற்றினெல்லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானந் தருமின்பவேதப் பொருளுந் தரும்
திருந்திய செல்வந் தருமழியாப் பெருஞ்சீர் தருமே. 37

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கமலாசனத்தேவி செஞ்சொற்
றார்தந்த வென்மனத் தாமரையாட்டி சரோருகமேற்
பார்தந்த நாத னிசைதந்த வாரணப் பங்கயத்தாள்
வார்தந்த சோதியம் போருகத் தாளை வணங்குதுமே. 38

புத்தகம் படிகமாலை குண்டிகை பொருள் சேர்ஞான
வித்தகந் தரித்த செங்கை விமலையை அமலைதன்னை
மொய்த்தகொந் தளகபார முகிழ்தனத் தவள மேனி [வாம்.
மைத்தகு கருங்கட் செவ்வாய் அணங்கினை வணங்கல் செய்

மண்கண்ட வெண்குடைக் கீழாகமேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச் செய்வாய் படைப்போன்முதலா
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும் விளம்பிலுன்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலா வல்லியே. [போற்

இயலானது கொண்டு நின்றிருநாமங்க ளேத்துதற்கு
முயலாமை யாற்றடு மாறுகின்றே னிந்த மூவுலகுஞ்
செயலா லமைத்த கலைமகளே நின்றிரு வருளுக்
கயலா விடாம லடியேனையுமுவந் தாண்டருளே. 41

தக்ஷிணாமூர்த்தி.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி, வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய், எல்லாமாய் அல்லது மாயிருந்த தனை யிருந்தபடி யிருந்துகாட்டிச், சொல்லாமற் சொன்ன வனை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்வாம். 42

சண்டேச நாயனார்.

தருமநெறிச் சிவபூசைக் கூறுசெயுந் தந்தைபதந்
தடிந்து பூவின்
மருவுசிவ பணிக்கூறு புரிபவரைத் தண்டிக்கும்
வலியா ரென்னப்

பொருளமையும் படிதண்டி யடிகளாம் பெரியரடிப்
போதை மற்றைத்
தெருண்மருவு சிந்தையடி யவர்குழுவை யெந்நாளுஞ்
சிந்தை ச்சேர்ப்பாம். 43

திருமால்.

ஆதித்தனிக்கோல மானான் அடியவர்க்காச்
சோதித் திருத்தூணிற் றோன்றினான்—வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே யெனவழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை. 44

இரங்கத் தனித்தனியே யெய்துகின்ற துன்பத்
தரங்கத்தை யேதாற் றடுப்பீர்—அரங்கற்குக்
கஞ்சந் திருப்பாதம் கார்மேனி யென்றவர்பால்
நெஞ்சம் திருப்பாத நீர். 45

திருவரங்கா உறைமார்பா! திசைமுகன் சேவிப்பக்கங்
திருவர் அங்காதரித்தின்னிசை பாடத்திருக்கண்வளர்
திருவரங்கா!வுன் பழவடியேற் கருள்செய்ய எழுந்
திரு! வரங்காதலித் தேனுனக்கே தொண்டுசெய் வதற்கே.

புலையாம் பிறவி பிறந்து என்செய்தோம் பொன்னி பொ
ன் கொழிக்கும், அலையார் திருவரங்கத் தெம்பிரான் நமது
அன்னையொடும், தொலையாத கானங்கடந்த அந்நாள் தடந்
தோறும் புல்லாய்ச், சிலையாய்க் கிடந்திலமே நெஞ்சமே
கழல் திண்டுகைக்கே. 47

தீண்டா வழும்புஞ் செந்நீரும் சீயுங்கரம்பும், செறிதசையும் வேண்டா நாற்றமிகு முடலை வீணேசுமந்து மெலிவேனே, நீண்டாய் தூண்டா விளக்கொளியாய் நின்று பொன்று அடியாரை, ஆண்டாய் காண்டா வனமெரித்த அரங்கா அடியேற் கிரங்காயே. 48

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க்கமலச் செங்கண், அச்சுதா! அமரரேறே! ஆயர் தங் கொழுந்தே! யென்னும், இச்சுவை தவிற யான்போய் இந்திர லோக மாளும், அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே. 49

அருமறை முதல்வனை யாழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனை தேவ தேவனை
இருபத முளரிக ளிறைஞ்சி யேத்துவாம். 50

தேடிய அகலியை சாபந் தீர்த்ததாள்
நீடிய வுலகெலா மளந்து நீண்டதாள்
ஓடிய சகடிற வுதைத்துப் பாம்பின்மேல்
ஆடியுஞ் சிவந்ததாள் என்னை யாண்டதாள். 51

மீனமை கோலநெடு நரசிங்க மாகிநிலம்
கீரகா ளளந்த குறளாய்
ஆனது சீறுமழு வல்வில்லும் வெல்லுமுனை
பலமுற்றசெங்கை யவராய்

வானாடர் வந்துதொழ மண்ணாடர் யாவரையும்
வாழ்விக்க வந்த வடிவாய்
நானாவி தங்கொள்பரி யாளாகி நின்றருளும்
நாராயணாய நமவே: 52

இலக்குமி.

தொழுதிபிசை அளிமுரலும் தாமரைமென் பொகுட்டி
லுறை கொள்கை போல
மறையுறழுந் திருமேனி மணிவண்ணன் இதயமலர்
வைகுமானே
முழுதுலகு மீனிநின்ற அருட்கொம்பே கரகமலம்
முகிழ்க்கெந் நாளும்
சுழிபெருங் கானலிற் றொழுவோர் வினைதீர வருள்
பொழிக்குங் கமலக் கண்ணாய். 53

அநுமார் துதி.

அஞ்சிலே யொன்றுபெற்றான் அஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாறாக ஆரியர்க்காக வேகி
அஞ்சிலே யொன்றுபெற்ற அணங்கைக் கண்டு அயலாரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தான் அவனெம்மை யளித்துக்
[காப்பான். 54

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லா மரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே. 55

17657